# பன்னல பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 11 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 17 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது றிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பன்னல பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### கணக்காய்விற்காக தகவல்கள் சமா்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 278,848,231 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,730,118 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,882,296 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

2006 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 3,566,137 தொகையான நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 7,141 | 7,613 | 2,962 |
| (ii) | வாடகை | 19,413 | 15,783 | 12,413 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,061 | 999 | 1,062 |
| (iv) | ஏனைய வருமானம் | 69,767 | 57,001 | 12,766 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 5,096,263 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 7,509,021 |

**2.3.3 வருமான நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) ஆதனவரி**

மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஆதனவரி நிலுவை ரூபா 2,271,359 ஆக இருந்ததுடன் தலைமை அலுவலகத்திற்குரிய 5 வருடங்களை விடக் கூடிய ஆதனவரி நிலுவையான 60 ஆதனங்களின் நிலுவை மீதி ரூபா 408,709 ஆக இருந்தது. நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 ஆவது பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 33 தொடக்கம் 41 வரையிலுள்ளதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிலுவைத் தொகையில் ரூபா 99,824 தொகை பதிவேடுகளிலுள்ள குறைபாடுகளினால் அறவிடமுடியாதிருந்ததாகவும் எஞ்சிய பணத்தை பகுதி பகுதியாக அறவிடுவதாகவும் தலைவர் 2012 ஒக்தோபர் மாதத்தின் போது எனக்கு அறிக்கையிடப்பட்டிருந்தனர்.

**(ஆ) ஏக்கர் வரி**

யக்வில உப அலுவலகத்திற்குரிய ரூபா 80,000 தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதியும் காணப்பட்டது.

**(இ) வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்**

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 59 இன் பிரகாரம் வருட ஆரம்பத்தின் போது அதிகாரப் பிரதேசத்தில் பரிசோதனை ஒன்று மேற்கொண்டு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் கைத்தொழில்கள் தொடர்பாக பட்டியொன்று தயாரிக்கப்பட்டு வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடவேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது அனுமதிப்பத்திரக் கோரிக்கை மற்றும் கட்டணம் செலுத்துதலின் அடிப்படையில் அந்த அனுமதிப்பத்திர உரிமையாளர்களின் பெயர்கள் மாத்திரம் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

கணக்குகளில் தொடர்ந்தும் காணப்படுகின்ற அறவிட முடியாதிருந்த ரூபா 971,587 ஆன வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணத் தொகை மீளாய்வாண்டின் போது நாட்குறிப்பு 02 இன் மூலம் பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 182 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

(அ) முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உயர் வகுப்பின் பதவியான செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதன் பதில் கடமைக்காக 2010 நவம்பர் மாதம் தொடக்கம் உள்ளூராட்சி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். 03 வருமானக் கட்டுப்பாட்டாளர் பதவிகளில் 02 உம் 04 நூலகர் பதவிகளில் 01 உம் மீளாய்வாண்டின் இறதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) தொழிளாளர், காவளாளி, சாரதி போன்ற பதவிப் பெயர்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 84 ஆக இருந்ததுடன் அதில் 71 பேர் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அமைய, நாட்கூலி அடிப்படையில் சபையிலிருந்து சம்பளம் பெறுகின்ற 41 பேர் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் சபையில் கடமையாற்றிக் கொண்டிருந்தனர்.

## 2.6 ஒப்பந்த நிருவாகம்

### வெடகெயாவ கடைத் தொகுதி நிர்மாணம்

ஒரே தடவையில் செலுத்தும் பணம் மற்றும் சபை நிதியத்தை ஈடுபடுத்தி இந் நிர்மாணங்களை நிர்மாணிப்பதற்காக தனியார் ஒப்பந்தக்காரருடன் ரூபா 7,204,172 தொகை உடன்படிக்கையில் 2004 யூலை 09 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனை இல. 3 இன் பிரகாரம் ஆறு மாதங்களில் அல்லது 2005 சனவரி 08 ஆந் திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட வேண்டும். இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதாவது உடன்படிக்கை காலத்தை விஞ்சி

6 வருடங்களும் 10 மாதங்களும் கடந்திருந்த போதிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. தாமதமான காலப்பகுதியில் முப்பத்திரண்டு தடவைகள் காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் எந்த சந்தர்ப்பத்திலும் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கான உரிய திகதிகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தக்காரர்களின் தாமதத்தினால் சபை காலத்தை நீடித்திருந்தமையினால் ரூபா 1,672,195 விலை முரண்கள் ஏற்பட்டிருந்தது. 2012 பெப்ரவரி 03 ஆந் திகதி வரையில் ரூபா 836,098 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் வியாபார செயற்பாடுகளுக்காக வியாபாரத் தொகுதி திறக்கப்படாதிருந்ததுடன் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1,700,000 தொகையான மேலதிக மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iii) இந்த வியாபாரத் தொகுதியிலுள்ள 24 கடைகளில் 8 கடைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வாடிக்கையாளர்கள் முன்வராமையினால் வழங்க முடியாதிருந்தது. வாடகைக்கு எடுக்கப்பட்ட 03 கடைகளில் 3 தவணைகளின் கீழ் செலுத்துவதற்கு இருந்த தொகையில் ஒரு தடவை மாத்திரம் செலுத்தப்பட்டமையினால் 2 தவணைகளின் நிலுவைப் பணமாக மேலும் அறவிட வேண்டியதாக ரூபா 745,330 தொகை காணப்பட்டது. இந்த கடை நிர்மாணங்கள் 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2011 வரையிலும் மின்சாரத்தைப் பெற்று உரிய முறையில் கடை உரிமையாளர்களுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) மீளாய்வாண்டின் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு சபையினால் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 4,124,586 ஆகக் காணப்பட்டது.

(இ) சபைக்குரிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டிராததுடன் உள்ளகக் கணக்காய்வு நிகழ்சிசித்திட்டத்தின் கீழ் போதியளவான உள்ளகக் கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்